1973 ஏப்ரல் 5]

என்று. முதலாவதாக, இந்தப் பகுதிகளிலே ஆரம்பித்திருக்கிறோம். மேலும் அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைக்குத் தகுந்தவாறு அவை ஆரம்பிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே ஒரு நிலையமானது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் இருக்கிறதா? அது லாபகரமாக ஓடுகிறதா? நட்டமாக ஓடுகிறதா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இவை எல்லாம் அநேகமாக லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் போன்ற இடங்களில் இது மாதிரியாகத் துணிகளைத் தயார் செய்கிற நிலையங்கள் துவங்கப்பட்டிருப்பதாகவும், அதனால் லாபம் இருப்பதாகவும் விவரங்கள் கூறுகின்றன. ஆகவே, காஞ்சிபுரத்திலே இது மாதிரி அமைத்து, துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வகையில் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : காதி வாரியமே இப்படி எல்லோருக்கும் வேலை கொடுக்கின்ற திட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாக, இந்தத் திட்டத்தை எல்லா இடங்களிலும் துவக்க ரூ. 3.92 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு இடமாக ஆரம்பித்து வருகிறோம். இப்பொழுது 68 பேர் வேலை செய்து வருகிறார்கள். பஞ்சாலை நூலுக்குத் தேவையான துணி மட்டும் இப்பொழுது தயாரிக்கப்படுகிறது. போட்டிக்குப் போவது என்றால் அதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது என்ற காரணத்தாலே, அதற்கான யோசனை இப்பொழுது இல்லை.

சாத்தியாறு அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

* 639 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1973 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வைகை அணை சுற்றுலா மையமாக இருக்கிறதா? அப்படி ஆகாமல் இருந்தால், இனிமேலாவது சுற்றுலா மையமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சுற்றுலா வாரியம், ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த இடத்தைச் சுற்றுலாக் கேந்திரமாக ஆக்கலாம் என்று ஆய்வு செய்துவருகிறது. மஞ்சளாறு, சாத்தியாறு, வைகை அணைப் பகுதிகளைச் சுற்றுலாக் கேந்திரங்களாக ஆக்கலாம் என்பதைப் பற்றி அறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு அரசு முடிவெடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள சாத்தியாறு அணைக்கட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், அங்கே பல்லாயிரக் கணக்கான பேர்கள் சென்று பார்வையிட்டு வருகிறார்கள். அப்படிப் பார்க்கின்றவர்களுக்கு வசதியை ஏற்படுத்துகின்ற முறையிலே அதை இன்னும் சிறப்பாகச் செய்தால் இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வருவார்கள். அதற்கு இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பல்லாயிரக்கணக்கானவர்கள் போக ஆரம்பித்தால், சுற்றுலா வாரியம் அந்த இடத்தை விட்டுவிடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் எந்த எந்த இடம் இம்மாதிரியான சுற்றுலாப் பயணிகளைப் பரப்புவதற்கான இடம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? அவை பற்றி முடிவெடுக்கப்பட்டு விட்டதா அல்லது இந்த ஆண்டு பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற, மேலவை, ஊராட்சி, ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோரிடம் கலந்து எந்த எந்த இடத்தை எல்லாம் சுற்றுலா மையமாக

1973 ஏப்ரல் 5]

ஆக்கலாம் என ஒரு ஆய்வு நடைபெற்று வருகிறது. அதனுடைய அறிக்கை இன்னும் அரசுக்கு வந்து சேரவில்லை. வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, மதுரையில் எந்த எந்தப் பகுதிகளைச் சுற்றுலா மையமாக ஆக்கலாம் என்று ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப் போலவே எல்லா மாவட்டங்களிலும், ஆங்காங்குள்ள பாராளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து, எங்கெங்கு சுற்றுலா மையம் அமைக்கலாம் என்று சொல்ல அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே இப்படி எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய தென் ஆற்காடு மாவட்டம் அதிலே இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மூன்று அணைக்கட்டுகளைப் பற்றிச் சொன்னார்கள், சாத்தியாறு, மஞ்சளாறு, வைகை, என்று. இவற்றில் வைகை அணைக்கட்டாவது சுற்றுலா இடமாக அமைக் கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அது ஏற்கனவே ஆய்விலே இருக்கிறது. இதற்கானக் காரியங்கள் விரைவிலே மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அழகர் கோவிலுக்குப் போகிற பாதையிலே பழமுதிர்ச் சோலை யிலே அநேக ரஸ்தாக்கள் இப்பொழுது போடப்பட்டு ஏராளமான யாத்ரீகர்கள் வந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பழ முதிர்ச் சோலைக்கு நான் சமீபத்திலே சென்றிருந்தேன். அங்கே செய்யப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றன. அவையெல்லாம் செய்யப்பட்டதற்குப் பிறகு அங்கே சுற்றுலா இல்லம் ஏற்படுத்துவதிலே அரசுக்கு ஆட்சேபனை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.